# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education, Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)**
**General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)**

| நேரம்: 3.00 மணித்தியாலங்கள் | சைவநெறி - I,II | பாட எண் : 12 \| T \| I, II |
|---|---|---|

பெயர் / சுட்டெண் .....

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.

## பகுதி – I

➢ **பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) "முள்ளாலலிங்கம்" காணப்படும் பிரசித்திபெற்ற ஈழத்து விநாயகர் ஆலயம்.
   1) களுதாவளைப் பிள்ளையார் 2) மாமங்கப் பிள்ளையார்
   3) கட்டுக்கலை செல்வவிநாயகர் 4) மருதடி விநாயகர்

2) "இராவணன் மேலது நீறு" என்று பாடியவர்.
   1) திருஞான சம்பந்தர் 2) காரைக்காலம்மையார் 3) திருமூலர் 4) சுந்தரர்

3) எல்லாக் கிரகங்களையும் ஈர்த்து அவற்றின் நடுநாயகமாக நிற்கும் கிரகம்
   1) வியாழன் 2) சனி 3) இராகு 4) ஞாயிறு

4) மட்டக்களப்பில் "தேரோட்டம்" என்று சிறப்பிக்கப்படும் ஆலயம்,
   1) களுதாவளைப்பிள்ளையார் 2) மண்டூர் கந்தசுவாமி
   3) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் 4) மாமாங்கேஸ்வரம்

5) ஞானியர், தாம் கண்டுணர்ந்த உண்மைகளைக் கூறும் விடயங்களாவன.
   1) ஆப்தவாக்கியம் 2) அநுமானம் 3) பிரத்தியட்சம் 4) வேதங்கள்

6) "ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லார்க்கு ஆயிரம் திருநாமம் பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்று கூறும் நூல்.
   1) வேதம் 2) திருவாசகம் 3) திருவிசைப்பா 4) பெரிய புராணம்

7) வேத ஆகம உண்மைகளை எளிய முறையில் சாதாரண மக்களும் விளங்கத்தக்க வகையில் கூறுவனவாக அமைவன.
   1) ஆகமம் 2) வேதம் 3) கந்தபுராணம் 4) புராணம்

8) "..... பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு நக்கு நிற்பர் அவர் தமை நாணியே" என்ற அப்பர் பாடலில் வந்துள்ள "பொக்கம்" என்ற சொல்லின் பொருள்,
   1) பொறுமை 2) வஞ்சகம் 3) அழிவற்றவர் 4) அறிவுமயமானவர்

9) சுந்தரர் "பிழையுளென பொறுத்திடுவீர்..." என்று தொடங்கும் பதிகம் பாடப்பெற்ற சந்தர்ப்பம்,
   1) வலக் கண் பெறுவதற்கு பாடப்பட்டது.
   2) இடக் கண் பெறுவதற்கு பாடப்பட்டது.
   3) ஊன்றுகோல் பெறுவதற்கு பாடப்பட்டது.
   4) குண்டையூர்க்கிழாரிடம் நெல்லுப் பெற வேண்டி பாடப்பட்டது.

10) திருமணச்சடங்கில் மணமகன் மணமகளின் காலை அம்மி மீது தூக்கி வைத்து விரலில் மெட்டி அணிந்த பின் தொடர்ந்து இடம் பெறும் சடங்கு,
1) மாலை மாற்றுதல் 2) பால், பழம் புசித்தல் 3) அருந்ததி பார்த்தல் 4) இரட்சாபந்தனம்

11) நாவலரின் குருபூஜைத் தினம்,
1) கார்த்திகை மகம் 2) சித்திரை அத்தம் 3) ஆவணி உத்தரம் 4) ஐப்பசி சுவாதி

12) ஞான வழிபாட்டைச் சாதித்து அனுபவமடைந்த ஞானிகள் பெறும் முத்தி,
1) பத முத்தி 2) பர முத்தி 3) சீவன் முத்தி 4) சாரூப முத்தி

13) திலகவதியார் அவதரித்த ஊர்,
1) திருவாமூர் 2) பாடலிபுரம் 3) திருவீரட்டானம் 4) திருவதிகை

14) கண்ணகியின் கோபம் தணியும் பொருட்டுச் செய்யப்படும் சடங்கு ,
1) மடையெடுத்தல் 2) குளுர்த்தி 3) தீமிதிப்பு 4) கதவு திறத்தல்

15) பொலன்னறுவைக் காலத்தில் விக்கிரமபாகுவால் அமைக்கப்பெற்ற "விக்கிரம சலாமேக ஈஸ்வரம்" அமைந்துள்ள இடம்,
1) அனுராதபுரம் 2) கந்தளாய் 3) குருநாகல் 4) தெய்வந்துறை

16) ஊனுடம்பில் இருந்தபடியே பிறவித்துன்பத்தைப் போக்கி சீவன் முத்தர் நிலை அடைந்தவர்,
1) நாவலர் 2) மெய்கண்டதேவர் 3) வரதபண்டிதர் 4) திருமூலர்

17) ஒரு மலத்தாற் பீடிக்கப்பட்ட ஆன்மாக்கள்,
1) சகலர் 2) பிரளயாகலர் 3) விஞ்ஞானகலர் 4) முத்தான்மாக்கள்

18) சிவலிங்கத்தில் பீடம், இலிங்கம் என்பன முறையே குறிப்பது,
1) சக்தி, சிவம் 2) சிவன், சக்தி 3) குறி, ஆவுடையார் 4) சிவம், சக்தி

19) சைவபரிபாலன சபையினால் ஆரம்பிக்கப்பட்ட "நாவலர் ஆச்சிரமம்" எத்தனையாம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டது?
1) 1888 2) 1945 3) 1938 4) 1903

20) சித்தாமிர்த புட்கரணியைத் தீர்த்தமாகக் கொண்ட ஆலயம்,
1) நயினை நாகபூஷணி அம்மன் 2) தெல்லிப்பளை துர்க்கையம்மன்
3) புன்னைச் சோலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் 4) வற்றாப்பளை கண்ணகியம்மன்

21) பிள்ளையார் கதை எழுநூற்று நாற்பத்து நான்கு அடிகளைக் கொண்டு எந்தப் பா வகையில் ஆக்கப்பட்ட நூல்,
1) வஞ்சிப்பா 2) கலிப்பா 3) ஆசிரிப்பா 4) குறட்பா

22) கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற மூன்று பகுதிகள் அடக்கப்பட்ட நூல்,
1) பகவத்கீதை 2) தம்மபதம் 3) மகாபாரதம் 4) இராமாயணம்

23) "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று கூறும் நூல்,
1) ஆத்திசூடி 2) சிலப்பதிகாரம் 3) மணிமேகலை 4) திருக்குறள்

24) பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், துறவறம் என்பன,
1) புருடார்த்தங்கள் 2) வாழ்க்கைப் படிநிலைகள்
3) நான்கு வர்ணத்தவர்கள் 4) சைவசாதனங்கள்

25) இந்துக்கள் தாம் வாழும் இடங்களிலெல்லாம் திருக்கோயில்களை அமைப்பதன் முதன்மை நோக்கங்களில் **அடங்காத** கூற்று,
1) புண்ணிய காரியங்களைப் புரிவதில் ஈடுபாடு காட்டுதல்.
2) கோபம், பொறாமை முதலான கெட்ட குணங்கள் நம்மை விட்டு அகலும்.
3) அன்பு, அருள், ஈகை முதலான அருங்குணங்கள் நம்மை விட்டு அகலும்.
4) பாவங்கள் பற்றிய அச்சம் உண்டாகாது உலகில் பகை விலகாது.

26) சூரியனை முழு முதலாகப் போற்றும் சமயம்,
1) கௌமாரம் 2) சௌரம் 3) சைவம் 4) வைஷ்ணவம்

27) பொருளைப் பெற்ற ஒருவர் தனக்கு உதவ வைக்கும் அறத்தை மேற்கொள்ள வேண்டியதில் **மிகவும் முக்கியமான** செயல்.
1) ஏழைகளுக்கு பொருள் கொடுத்தல் 2) வறியவரது மிக்க பசியை நீக்குதல்
3) வறியவர்க்கு ஆடை கொடுத்தல் 4) ஏழைகளுக்கு இருப்பிட வசதி செய்து கொடுத்தல்

28) வேதங்கள் "அபௌர்ஷேயம்" என அழைக்கப்படக் காரணம்.
1) மனிதனால் படைக்கப்படாதவை 2) காதால் கேட்கப்படுவது
3) தொன்று தொட்டு வருபவை 4) எழுதப்படாதவை

29) இறைவனது அருள் ஆன்மா மீது பதிதலுடனான சத்தினிபாதத்துடன் தொடர்புடனான ஐந்தொழில்,
1) படைத்தல் 2) காத்தல் 3) அழித்தல் 4) அருளல்

30) "நான் செய்கிறேன்" என்று எண்ணாது "கடவுளுடைய திருவருள் செய்விக்கின்றது" என்று, செயல்களைக் கடவுளுடையதாகக் கருதி செய்யும் வினை,
1) பரார்த்த வினை 2) பற்றற்ற வினை 3) ஆகாமிய வினை 4) சஞ்சித வினை

31) விக்கிரமாதித்தனின் மனைவி இலக்கண சுந்தரி துன்பத்திற்கு ஆளாகிய போது முறைப்படி அனுட்டித்த விரதம்,
1) கந்தசஷ்டி 2) கேதார கௌரிவிரதம் 3) சதுர்த்தி 4) பெருங்கதை

32) "ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி வாழ" வாழ்த்தும் பூர்வக் கிரியை,
1) பூப்புனித நீராட்டு விழா 2) சீமந்த விழா 3) பிறந்த நாள் விழா 4) திருமண விழா

33) சைவவித்தியா விருத்திச் சங்கத்தால் பாலபண்டித, பண்டித வகுப்புக்கள் நடாத்த உருவாக்கப்பட்ட பாடசாலை,
1) தொழிற்பயிற்சி பாடசாலை 2) மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்
3) வண்ணார் பண்ணை நாவலர் வித்தியாசாலை 4) காவிய பாடசாலை

34) திருவருட் பயனிலுள்ள நான்காம் அதிகாரம் கூறும் விடயம்,
1) அருளுரு நிலை 2) அருளது நிலை 3) இருண்மல நிலை 4) உயிரவை நிலை

35) இறைவனை நாயகனாகவும் தம்மை நாயகியாகவும் கருதிப் பாடல்களைப் பாடிய சமயகுரவர்.
1) ஆண்டாள் 2) சம்பந்தர் 3) மாணிக்கவாசகர் 4) சுந்தரர்

36) திருமாலின் நாமங்களுள் ஒன்று,
1) வீரவாகுதேவர் 2) சயந்தன் 3) அச்சுதன் 4) குமரேசன்

37) சிவபிரானுடைய பெருமைகளைப் பேசும் அருட்பாடல்களின் தொகுப்பு
1) தோத்திரப் பாடல்கள் 2) திருமுறை 3) தேவாரம் 4) பெரிய புராணம்

➢ **கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 38 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.**

| ஆதாரமான குறிப்புக்கள் | விசேட அம்சங்கள் | சடங்குகளை ஆற்றுப்படுத்துபவர் |
|---|---|---|
| A<br>சீர்பாதன் வரன்முறைக்கல்வெட்டு | D<br>குடுக்கை கூறுதல் | G<br>கப்புகனார் |
| B<br>மட்டக்களப்பு மான்மியம் | E<br>கோவலன் கூத்து | H<br>சங்கமர் |
| C<br>பள்ளுப் பாடல் | F<br>திருச்செந்தூர்ப்புராணம் | I<br>பூசாரியார் |

38) கடல் நீரில் தீபமேற்றுதலுடன் தொடர்புடைய ஆலயத்தோடு தொடர்புடைய தொகுதி
1) B,F,I 2) C,E,H 3) C,D,I 4) C,E,I

39) "சின்னக்கதிர்காமம்" என அழைக்கப்படும் ஆலயத்துடனான தொகுதி
1) A,F,G 2) B,D,H 3) A,F,H 4) B,F,G

40) தேர்த்திருவிழா நாள் இரவு திருச் சூகரவேட்டை இடம்பெறும் ஆலயத்தோடு தொடர்புடைய தொகுதி
1) A,F,G 2) B,E,I 3) B,D,H 4) C,E,G

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

➢ **முதலாம் இரண்டாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

*01.* கீழ்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

i. சித்திரா பௌர்ணமி தினத்தில் ஆலயங்களில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
ii. குங்கிலியக் கலயர் தன் அன்பினால் சாய்ந்த சிவலிங்கத்தை நிமிரச் செய்த தலம் எது?
iii. "மாசிகம்" எனப்படும் அபரக்கிரியை எக்காலங்களில் செய்யப்படும்.
iv. வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியவை எவை?
v. சாதார தீட்சை வகைக்குள் அடங்கும் தீட்சைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
vi. பஞ்சாங்கம் குறிப்பிடும் "இராசி"களுள் **நான்கினை** குறிப்பிடுக.
vii. சற்புத்திரமார்க்கத்திற்குரிய ஒழுக்கங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.
viii. வைரவருக்குரிய விரத தினங்கள் **இரண்டு** தருக.
ix. "அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத" என்ற தேவாரத்தில் இடம் பெறும் புராணக் கதையை குறிப்பிடுக.
x. எம்முன்னோர் ஆற்றி வந்த அறச் செயல்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. *(10x2 = 20 புள்ளிகள்)*

*02.* கீழ்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரையையும் தருக.

i. "உற்றுமை சேர்வது ....."
ii. "மீளா அடிமை உமக்கே....."
iii. "தந்தது உன் தன்னைக்....."
iv. "தண்ணனி வெண் குடை....."
v. "உம்பர் தரு தேனு....." *(3 + 2 x 2= 10 புள்ளிகள்)*

*03.* "தத்துவஞான பரம்பரையில் வந்த ஞானாசிரியர்கள் சந்தானகுரவர்"

i. அகச்சந்தான குரவர் இருவர் பெயர்களைக் குறிப்பிடுக.
ii. பரபக்கம், சுபக்கம் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்ட நூல் எது? பரபக்கம், சுபக்கம் கூறும் விடயங்களையும் குறிப்பிடுக.
iii. சந்தான குரவர்களுள் ஒருவரான **உமாபதி சிவாச்சாரியார்** பற்றி விளக்குக.

*(2+3+5 = 10 புள்ளிகள்)*

*04.* "மகோற்சவங்கள் ஊர் மக்களை ஒன்று சேர்க்கின்றன"

i. காமிய கிரியைகள் என்றால் என்ன?
ii. கும்பாபிஷேகத்தை "பெருஞ்சாந்தி" என்று போற்றுதற்குரிய காரணத்தைக் குறிப்பிடுக.
iii. கும்பாபிஷேகத்தின் **நான்கு** வகைகளையும் குறிப்பிட்டு விளக்குக. *(2+3+5 = 10 புள்ளிகள்)*

*05.* "சைவ வாழ்வின் ஆதாரங்கள் விழுமியங்கள்"

i. ஆலயங்களில் சிவனடியார்களுக்கு உணவளிப்பதை எவ்வாறு அழைப்பார்?
ii. பதி புண்ணியம், பசு புண்ணியம் என்றால் என்னவென்பதைக் குறிப்பிட்டு எழுதுக.
iii. சைவ விழுமியங்களுள் '**ஒப்புரவு**' பற்றி விளக்குக. *(2+3+5 = 10 புள்ளிகள்)*

*06.* விடிவாமளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து – திருவருட்பயன்

i. முத்தி கிடைக்கும் வரை ஆன்மாவிற்கு விளக்குப் போன்று ஒளி செய்பவை யாவை?
ii. மாயா காரியங்களைக் குறிப்பிடுக.
iii. மும்மலங்களுள் **ஆணவம்** பற்றி விளக்குக. *(2+3+5 = 10 புள்ளிகள்)*

*07.* கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

i. தீபாவளி
ii. சைவ வாழ்வு
iii. அருணகிரிநாதர்
iv. ஆகமம் *(5+5 = 10 புள்ளிகள்)*